# மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலங்களின் ஆக்கிரமிப்பை சிங்கள பௌத்தமயமாக்கலின் ஒரு வடிவமாகவே கருதுகிறோம்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரைப் போராட்டம் தொடர்பான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கையொன்றை இன்று வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகள் காலங்காலமாக அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களினால் தமது கால்நடைகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

அண்மைய வருடங்களில், இந்தப் பிரதேசங்களில் இலங்கை அரசினால் சட்ட விரோதமான முறையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்தக் குடியேற்றங்களின் காரணமாக மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரைப் பிரதேசங்களினைத் தமிழ் கால்நடைவளர்ப்பாளர்கள் பயன்படுத்துவது தடைப்பட்டிருக்கிறது.

மேய்ச்சல் தரையினைப் பயன்படுத்தும் தமிழ் மக்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் மேய்ச்சலுக்கு விடப்பட்ட அவர்களின் கால்நடைகளின் மீதும் வன்முறை பிரயோகிக்கப்படுகின்றது.

கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரை மீது இதுவரை இருந்த உரித்து அகற்றப்பட்டமை அவர்களின் பொருளதாரத்தின் மீதும், வாழ்வாதாரத்தின் மீதும் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தி இருக்கிறது.

அண்மையில் இந்தப் பகுதியில் ஒரு புத்தர் சிலையும் நாட்டப்பட்டது. இந்த உரிமை மீறல் தொடர்பிலே பாதிக்கப்பட்ட மக்களும், அவர்களது ஆதரவாளர்களும் பல மாதங்களாக அமைதி வழியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அத்துமீறல் செயன்முறையினையும் வன்முறையினையும் கண்டிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தினையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஓர் அமைதிப் போராட்டத்திலே கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி அன்று இந்தப் பிரதேசத்திலே ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக ஒன்றுகூடினர் என்ற தோரணையிலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களிலே பலர் சந்திவெளிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 21 புதன்கிழமை 08.11.2023 கதிர் 108

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## தமிழக மீனவர்கள் நான்கு பேர் நிபந்தனைகளுடன் விடுதலை

### 22 மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நால்வர் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய 22 மீனவர்களுக்கும் விளக்கமறியலை நீடித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம்

2 ➤

## அத்தியாவசிய சேவையாக தபால் சேவை பிரகடனம்

தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இன்று மாலை வெளியிடப்பட உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்களின் போராட்டம் காரணமாக இன்று நாடு முழுவதும் தபால் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் பந்துல குணவர்தன வெளியிடவுள்ளார். (04)

## வர்த்தமானி தொடர்பில் கடும் விமர்சனங்களை நீதித்துறை மீது முன்வைத்த ரொஷான் ரணசிங்க!

அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இடைக்கால குழுவின் மீதான வர்த்தமானியை இடைநிறுத்தி நேற்று வழங்கிய தீர்ப்பு தொடர்பில், விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீதித்துறை மீது கடுமையான விமர்சனத்தை விடுத்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு ஒரு தரப்பின் கருத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகவும் சட்டமா அதிபர் அமைச்சுக்கு ஆதரவளிக்கவில்லை எனவும், ஊழல் மோசடிகளில் ஈடுபடும் கிரிக்கெட் அதிகாரிகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர்

2 ➤

## கோப்பாயில் வீடு உடைத்துத் தங்கநகை திருட்டு பெண் உட்பட சந்தேக நபர்கள் மூவர் கைது!



கோப்பாய்ப் பகுதியில் இருவேறு வீடுகளை உடைத்து தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும் உடந்தையாக இருந்ததாக பெண் உட்பட இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகுதி நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மற்றொரு தொகுதி நகை மன்னார் மற்றும் திருகோணமலை பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கடந்த மார்ச் மாதம்

2 ➤

## விடுமுறை இரத்தான நிலையிலும் தபால் ஊழியர்கள் போராட்டம்!

தபால் திணைக்களத்தின் வளங்களை விற்பனை செய்யும்அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக 2 நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் ரத்து செய்ய வேண்டும் என அதன் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆகிய 3 நாட்களில் அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் நேற்று அறிவித்திருந்தது.

இது குறித்த அறிவிப்பை வெளியிட்ட தபால்மா அதிபர், தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான எந்தவொரு தபால் நிலையமும் மூடப்படாது எனவும், மேலும் நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் பயனுள்ள முதலீட்டு வாய்ப்பு, அதனை நடத்துவதற்கு பொருத்தமான கட்டிடத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கும் என அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளதாகவும் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## மத்திய மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு தீபாவளியை முன்னிட்டு திங்கள் விடுமுறை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை (13) மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் இது தொடர்பான கோரிக்கையை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகே விடம் விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்று திங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கும், அந்த நாளுக்குரிய கல்வி நடவடிக்கையை ஈடுசெய்வதற்காக எதிர்வரும் சனிக்கிழமை (18) மத்திய மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகளை நடத்துவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். தமது கோரிக்கையை ஏற்று, தமிழர்களின் முக்கிய பண்டிகைகளுள் ஒன்றான தீபாவளிக்கு விசேட விடுமுறை வழங்க நடவடிக்கை எடுத்த மத்திய மாகாண ஆளுநருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் நன்றி தெரிவித்துள்ளார். (அ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# குடும்பப் பெண் சுட்டுக் கொலை பெறாமகனைத் தேடி வலைவீச்சு

குடும்பப் பெண்ணொருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் மாவட்டம், இராஜாங்கனைப் பிரதேசத்தில் நேற்று (07) இரவு இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தாயாரான 54 வயதுடைய ஆர். டயானா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது வீட்டில் வைத்து உள்நாட்டுத் துப்பாக்கியால் அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவரது இளைய சகோதரியின் 23 வயது மகனைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

காணிப் பிரச்சினை காரணமாகத் தனது பெரியம்மாவைச் சந்தேகநபர் சுட்டுக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## கோப்பாயில் வீடு உடைத்துத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் பிரிவில் அதிகாலை வேளை ஆட்கள் இல்லாத நேரம் வீடு உடைத்து ஐந்தே கால் பவுண் நகைகளை களவெடுத்தமை, மற்றொரு வீட்டில் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி வீட்டில் ஆட்கள் அற்ற நிலையில் 13 பவுண் நகைகளைத் திருடியமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முதன்மைச் சந்தேகநபரான திருநெல்வேலியைச் சேர்ந்த 22 வயதுடையவர், நகையை வாங்கி உருக்கிய ஒருவர், உடந்தையாக இருந்த பெண் என 3 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். (01)

## தமிழக மீனவர்கள் நான்கு பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்துர் வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 26 தமிழக மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 12 தமிழக மீனவர்கள் 3 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இதேபோன்று கடந்த 28 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 2 படகுகளுடன் மேலும் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு 5 இழுவைப் படகுகளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 26 மீனவர்களும் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களஅதிகாரிகளால் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து 3 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களில் ஒருவர் ஒரு படகின் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டதை அடுத்து அந்தப் படகைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிவான், அந்தப் படகில் பயணித்த உரிமையாளர் உள்ளிட்ட நால்வரையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து விடுதலை செய்து உத்தரவிட்டார்.

ஏனைய 22 மீனவர்களுக்கும் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த வழக்கு விசாரணையின் போது கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விசேடமாக வருகைதந்திருந்த அரச சட்டத்தரணி நா. நிசாந்தன் பிரசன்னமாகி வாதங்களை முன்வைத்திருந்தார்.

இதுவரைகாலமும் எல்லை தாண்டும் மீனவர்களது வழக்கு விசாரணைகளின் போது படகு உரிமையாளர் தரப்பு தவிர்க்கப்பட்டு படகில் கைதானோரில் முதன்மையான நபரே முதலாம் இலக்க சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கைது நடவடிக்கையின் போது படகில் பிரசன்னமாகியிருக்காவிடினும், படகின் உரிமையாளர், வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்துபவர், தலைவர் ஆகிய மூவரில் ஒருவரை முதன்மை சந்தேகநபராகக் குறிப்பிட வேண்டும் எனவும், அவ்வாறு முதன்மைச் சந்தேகநபராகக் குறிப்பிட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த நபர் மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்க வேண்டும் எனவும் சட்ட ஏற்பாடுகளில் உள்ள விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விசேடமாக வருகை தந்திருந்த அரச சட்டத்தரணி நா.நிசாந்தன் மன்றுரைத்தார்.

மீனவர்கள் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி இதனை மறுத்து, 2018ஆம் இலக்க 15 ஆம் பிரிவு வெளிநாட்டுப் படகுகளுக்கான சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு வலியுறுத்தப்படவில்லை என ஆட்சேபம் தெரிவித்தார்.

இதையடுத்து இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிவான் குறித்த விடயம் தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் வரை 22 மீனவர்களது விளக்கமறியலை வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வர்த்தமானி தொடர்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரொஷான் ரணசிங்க இன்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை ஆற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் சபை ஊழல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, நீதி அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர், குற்றப்புலனாய்வு திணைக்களம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்ததாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் கணக்காய்வு அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பி, மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்த போதும் இதுவரை சட்டமா அதிபர் சட்ட நடவடிக்கை எடுக்காது புறக்கணித்து வருகின்றார் என அமைச்சர் ரோஹசான் ரணசிங்க தெரிவித்துள்ளார். (க)

## இலங்கைக்கு வருவோருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி வழியில், கால்நடை வளர்க்கும் மக்களின் மேய்ச்சல் தரை மீதான உரித்துக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடிய பல்கலைக்கழக மாணவர்களினைப் பொலிஸார் கைது செய்தமையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மாணவர்களின் ஜனநாயக உரிமையின் மீது மேற்கொள்ளப்பட்ட மீறலாகவே இந்தக் கைதுகளை நாம் பார்க்கிறோம்.

வடக்குக் கிழக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்களையும் மாணவர்களையும் கைது செய்யும் போக்குத் தொடர்வதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலங்களின் மீதான ஆக்கிரமிப்பினை நாட்டின் வடக்குக் கிழக்கிலே பல தசாப்தங்களாக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்தமயமாக்கலின் ஒரு வடிவமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார இருப்புக்கு இந்த ஆதிக்கம் மிக்க சிங்கள பௌத்தமயமாக்கல் செயன்முறை ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இராணுவத்தின் உதவியுடனும், தீவிரத்தன்மை மிக்க பௌத்த மத குருக்களின் ஆதரவுடனும், இனவாதத்தினைக் கையில் எடுத்துள்ள சிங்கள அரசியல்வாதிகளின் அனுசரணையுடனும் இந்தச் செயன்முறை வடக்குக் கிழக்கிலே தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதன் காரணமாக இனங்களுக்கு இடையிலே பதற்றமும் வெறுப்புமே உருவாகி வருகிறது.

மயிலத்தமடு, மாதவனைப் பிரதேசத்திலே ஜனநாயகப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களின் கைதினைக் கண்டிக்கும் அதேவேளை, தமது உரிமைகளுக்காகப் போராடும் கால்நடை வளர்ப்பாளர்களின் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது முழுமையான ஆதரவினை வெளியிடுகிறது.

இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் குடியேற்றப்பட்டவர்கள் அகற்றப்பட்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இந்த மேய்ச்சல் தரை மீது இருக்கும் உரித்து உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அரசினை எமது ஆசிரியர் சங்கம் கோருகிறது.

மயிலத்தமடு, மாதவனை உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் அனைத்து சிங்கள பௌத்தமயமாக்கல் செயன்முறைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் நாம் கோருகிறோம்.

இந்த ஜனநாயக மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும்படி நாம் நாட்டின் அனைத்து முற்போக்கு சக்திகளையும் இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றுபடும்படி கோருகிறோம், என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# மொனராகலையில் மாணவர்களுக்கான ஈ.கல்வியின் அக அமைதி பயிற்சி முகாம்





(வி.ரி. சகாதேவராஜா)

அக விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலம் சுயகற்றலை விருத்தி செய்து மாணவர்கள் தங்கள் சொந்த தொலைநோக்கத்தை தீர்மானிக்கும் இரண்டு நாள் பயிற்சி பட்டறை மொனராகலையில் நடைபெற்றது.

ஈ.கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மொனராகலை விபுலானந்தா தமிழ் மகா வித்யாலயம் மற்றும் ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 11 மாணவர்களுக்கு இப்பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது ஈ.கல்வி அமைப்பின் செயலாளர் இளங்கோ வினாசித்தம்பியின் நேரடி வழிகாட்டலில், உளம்நிறை வாழ்க்கைக்கான லம்போதர நிறுவனத்தின் ஸ்தாபகரும் திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளருமான தினகரன் ரவி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈ.கல்வி அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளரும் ஹோலிக்குறோஸ் மகாவித்தியாலயத்தின் அதிபருமான அருட்சகோதரி சிறிய புஸ்பம் பட்டறைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். வளவாளர்களாக ஆசிரிய ஆலோசகர்களான ரி.விஸ்வஜித்தன், எஸ்.தயாகரன், அதிபர் வி.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களை உளநெருக்கிடைகளில் இருந்து விடுவித்து சுயகற்றலுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு அவுஸ்திரேலியாவில் இயங்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பழையமாணவர்கள் நிதி அனுசரணை வழங்கினார்கள்.

## சிரேஷ்ட பிரஜைகளுக்கு அடிப்படை உபகரணங்கள் அட்டாளைச்சேனையில் வழங்கி வைக்கப்பட்டன



(நவாஸ்)

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 20 சிரேஷ்ட பிரஜைகளுக்கு கட்டில், மெத்தைகள், காற்று மெத்தை மற்றும் கழிப்பறை கொமேட் என்பன வழங்கப்பட்டன.

முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.ஹைஸ் தலைமையில் இன்று நடைபெற்ற நிகழ்வில் அவை கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முஸாபிர், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.எம். அர்ஸாத், நிர்வாக உத்தியோகத்தர் கே.வீ.சலீம், கிராம நிர்வாக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.ஜௌபர் மற்றும் கணக்காளர் ஏ.எல்.றிபாஸ், சமூக சேவைப் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.வீ. ஹாஸீம் மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

## இறக்காமம் ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளுக்கு வாசிப்பு மாதத்தையொட்டிய வாசிப்புப் போட்டி



(நூருல் ஹுதா உமர்)

"உலகம் வாசிப்பவர்களுக்கே சொந்தமானது" எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் நாடு பூராகவும் மாணர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, இறக்காமம் பிரதேச சபைக்கு உட்பட்ட ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளுக்கு இடையிலான வாசிப்புப் போட்டி இன்று இறக்காமம் பிரதேச சபையின் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் எம். சாபீர், பிரதம நூலகர் எம்.எம். முநௌபர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தனர்.

## கடந்த 10 மாதங்களுக்குள் 69,479 டெங்கு நோயாளர்கள்

இவ்வருடத்தின் கடந்த 10 மாதங்கள் மற்றும் 5 நாட்களில் 69,479 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் கலாநிதி நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது 39 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் 25 சதவீதம் பேர் பாடசாலை மாணவர்களாக இருப்பதால் பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை முறையாக சுத்தம் செய்ய வேண்டும் என பாடசாலை நிர்வாகங்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ரெந-14)



# காஸா சிட்டியை சுற்றிவளைத்தது இஸ்ரேல் ராணுவம் பொதுமக்கள் வெளியேற காலக்கெடுவை வழங்கியது

காஸா பகுதியின் தலைநகரான காஸா சிட்டியை சுற்றிவளைத்துள்ள இஸ்ரேல் ராணுவம், அந்த நகருக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தமாக அங்குள்ள பொதுமக்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

அதையடுத்து, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அந்த நகரிலிலிருந்து காஸாவின் தெற்குப் பகுதிக்கு வெளியேறிச் சென்றுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் அமைப்பினரின் கோட்டையாகத் திகழும் காஸா சிட்டிக்குள் நுழைந்து அவர்களை வேட்டையாடுவதற்காக இஸ்ரேல் ராணுவம் பல கட்டங்களாகத் தாக்குதல் நடத்தி அந்த நகரை நோக்கி முன்னேறி வந்தது.

இந்த நிலையில், காஸா சிட்டியை தாங்கள் அனைத்துத் திசைகளிலும் சுற்றிவளைத்துவிட்டதாக இஸ்ரேல் ராணுவம் திங்கட்கிழமை அறிவித்தது.

நகரைச் சுற்றிலும் இஸ்ரேல் படையினர் உள்ளதால் காஸாவின் தெற்குப்பகுதியும், வடக்குப் பகுதியும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையிலான அண்மைக்காலப் போரில் இது மிக முக்கியமான கட்டம் என்று இஸ்ரேல் ராணுவம் கூறியது. அதையடுத்து, கூடிய விரைவில் ராணுவம் அந்த நகருக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த நிலையில், நகருக்குள் முழு வீச்சில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக, அங்கு வசிக்கும் பொதுமக்களை தெற்கு காஸாவுக்கு வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டது. அதற்காக, காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை 4 மணி நேரத்துக்கு தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்வதாகவும் ராணுவம் அறிவித்தது.

அதையடுத்து, கால்நடையாகவும், கழுதை வண்டிகளிலும் அந்த நகரிலிருந்து ஏராளமானவர்கள் தெற்குப் பகுதியை நோக்கி நேற்று வெளியேறினர்.

இருந்தாலும், அந்த நகரம் உள்பட வடக்கு காஸா பகுதியில் இன்னும் 9 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இருப்பதாக காஸா உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)

## லண்டன் தேசிய அருங்காட்சியகத்துக்குள் புகுந்து புகழ்பெற்ற ஓவியத்தின் கண்ணாடி உடைப்பு



லண்டனிலுள்ள தேசிய அருங்காட்சியகத்துக்குள் புகுந்து புகழ்பெற்ற ஓவியர் டீகோ விலாஸ்க் ஓவியத்தின் பாதுகாப்புக் கண்ணாடியை உடைத்ததாக இரு பருவநிலை மாற்ற கவனவீர்ப்புப் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'ஜஸ்ட் ஸ்டொப் ஒயில்' என்ற அமைப்பைச் சேர்ந்த இவர்கள் இருவரும் அருங்காட்சியகத்துக்குள் நுழைந்து 'வீனஸின் குளியறை' என்ற புகழ்பெற்ற ஓவியத்தின் கண்ணாடிகளை சுத்தியல்களால் உடைத்துள்ளனர்.

இதில் அந்த ஓவியத்தின் பாதுகாப்புக் கண்ணாடிச் சட்டகம் உடைந்துள்ளது. பல இடங்களில் கண்ணாடியில் ஓட்டைகளும் விழுந்துள்ளன.

'ஜஸ்ட் ஸ்டொப் ஒயில்' என்ற இந்த அமைப்பினர் ஏற்கெனவே இதேபோன்று புகழ்பெற்ற கலைப் பொருள்களையும் அரச கட்டடங்களையும் இலக்காகக் கொண்டு போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

பிரிட்டனில் புதை படிவுகளைக் கண்டறிந்து எரிபொருள் எடுக்க அனுமதிக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவர்கள் இந்தப் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

போராட்டக்காரர்களால் உடைக்கப்பட்ட ஓவியம் பின்னர் பரிசோதிப்பதற்காக அகற்றப்பட்டது. இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தில் பார்வையாளர்கள் உள்நுழைவது தடுக்கப்பட்டிருந்தது. சிறிது நேரம் கழித்து மீண்டும் பார்வையாளர்கள் அருங்காட்சியகத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். (04)

## இஸ்ரேலிலிருந்து தூதர அதிகாரிகளை திரும்பப் பெற்றது தென்னாபிரிக்கா



பாலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ/க்கும் இஸ்ரேலுக்குமான போரில் அப்பாவிப் பொதுமக்கள் பலியாவது தொடர்ந்து வரும் நிலையில் தென்னாபிரிக்கா, இஸ்ரேலுடனான தனது உறவை முடிவு செய்ய இஸ்ரேலில் இருந்த ஒட்டுமொத்தத் தூதர அதிகாரிகளையும் திரும்பப் பெற்றுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ச்சியாக அமைதியை உருவாக்கும் நிலைப்பாடு கொண்டுள்ள நாடு, தென்னாபிரிக்கா. தூதர்களைத் திரும்ப பெறுவது வழக்கமான நடவடிக்கைதான். இஸ்ரேலுடனான உறவைத் தொடர்வது என்பது எல்லா விதங்களிலும் சாத்தியமா, என்பது குறித்து முடிவு செய்ய அவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்காவின் வெளியுறவு அமைச்சர் நலேதி பந்தோர்.

தென்னாபிரிக்கா இஸ்ரேல் நாட்டில் தூதர் யாரையும் கொண்டிருக்கவில்லை. நாடு முழுவதும் பணியாற்றிய தூதரக அதிகாரிகளே தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளனர்.

மேலும், குழந்தைகளையும் அப்பாவி பொதுமக்களையும் கொல்வது குறித்து நாங்கள் மிகவும் கவலையுறுகிறோம். இஸ்ரேலின் பதிலளிக்கும் இயல்பு என்பதை கூட்டுத் தண்டனையாகத்தான் பார்க்க முடிகிறது. முழுமையான போர் நிறுத்தத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்கா தனது ஒட்டுமொத்தத் தூதரக அதிகாரிகளையும் திரும்ப பெற்றது என்பது பயங்கரவாத குழுவான ஹமாஸ/க்கும் ஈரானுக்கும் கிடைத்த வெற்றி, என இஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1400 க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியானார்கள். அதற்குப் பதிலளிக்கும் விதமாக இஸ்ரேல் தொடர்ந்து வரும் போர் 32 நாட்களைக் கடந்து நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)



## பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் நவாஸ் ஷெரீப்பின் கட்சி புதிய கூட்டணி

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்பாராத திருப்பமாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சி, பிலாவல் புட்டோ ஜர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு (பிபிபி) எதிராகக் கூட்டணி அமைத்துள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் வரும் பெப்ரவரி எட்டாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பிஎம்எல்-என் கட்சி தலைமையிலான கூட்டணியில் பாகிஸ்தான் மக்கள் கட்சி இருந்த நிலையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சிந்து மாகாணத்தில் முத்தாகிதா குவாமி இயக்கம் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடவுள்ளதாக பிஎம்எல்-என் கட்சி செவ்வாய்க் கிழமை அறிவித்தது. இரு கட்சிகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசியதையடுத்து இந்த அறிவிப்பு வெளியானது.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தனது கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்காக ராணுவத்துடன் நவாஸ் ஷெரீப் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாகத் தகவல் வெளியானது. அதிலிருந்து நவாஸின் பிஎம்எல்-என் கட்சிக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் இடையிலான கூட்டணியில் விரிசல் விழுந்துள்ளது.

மேலும், சிந்து மாகாணத்தில் நீண்ட காலமாக வலிமையாக இருக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சி அங்கு ஆட்சி அமைக்கக் கூடாது என ராணுவம் விரும்புவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதையடுத்து, பாகிஸ்தான் மக்கள் கட்சியுடனான கூட்டணியை முறித்துக் கொண்டு புதிய கூட்டணியை பிஎம்எல்-என் கட்சி உருவாக்கியுள்ளது. ஜிடிஏ, ஜியுஐ-எப் ஆகிய மேலும் இரு பிரதான கட்சிகளும் பிஎம்எல்-என் கட்சியுடன் ஏற்கெனவே கூட்டணி சேர்ந்துள்ளன.

பிஎம்எல்-என் கட்சியின் புதிய கூட்டணிக்குப் பதிலடியாக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாப் கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆலோசித்து வருகிறது.

பாகிஸ்தானில் மூன்று முறை பிரதமராக இருந்த ஒரே தலைவரான நவாஸ் ஷெரீப், லண்டனிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய பின்னர் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நான்காவது முறையாகப் பிரதமராகும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (04)

## ஹமாஸ் தாக்குதலில் இறந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி கடைப்பிடிப்பு

இஸ்ரேல் மீது கண்மூடித்தனமாக ஹமாஸ் தாக்குதல் நடத்தி ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலியர்கள், தாக்குதலில் இறந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி நிகழ்வை நேற்று கடைப்பிடித்துள்ளனர். ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று, இஸ்ரேலியர்களின் கலாசார நிகழ்வின் ஒரு பகுதியாக கொண்டாட்டத்தில் நகரமே மூழ்கியிருந்தபோது எதிர்பாராத தாக்குதலைத் தொடங்கியது ஹமாஸ் குழு.

ஆயுதம் ஏந்திய ஹமாஸ் குழுவினர் வீடுகளுக்குள் புகுந்து கண்ணில் தென்பட்டவர்களையெல்லாம் கொன்று குவித்தனர். அந்தத் தாக்குதலில் 1400 க்கும் மேற்பட்டோர் பலியாகினர். 242 பேர் பிணைக்கைதிகளாக ஹமாஸால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று செய்திகள் தெரிவித்தன. இந்த நாளின் இழப்பை நினைவு கூரும் வகையில் இஸ்ரேல் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேம் நகரங்களில் இந்த ஒரு மாத நினைவு இரங்கல் கடைப்பிடிக்கப்பட்டது. (04)

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் கிளினிக் மருந்தகம் திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நேற்றை தினம் கிளினிக் மருந்தகம் திறந்து வைக்கப்பட்டது

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பீ அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் திருமதி எஸ்.ஆர் இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த அலகினைத் திறந்து வைத்தார்.



குறித்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், அவசியம் தேவையான இம்மருந்தக உருவாக்கமானது மருத்துவமனையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் திருமதி எஸ்.ஆர்.இஸ்ஸதீனினால் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன் மூலம் மருந்தகத்தில் நோயாளர்கள் காத்திருப்பதை குறைக்கவும் மருந்துகளை இலகுவாக களஞ்சியப்படுத்தவும் முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், கல்முனை ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ. நபீல், பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திரகுமார் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# அதிமுகவின் ஆவணங்களை ஓபிஎஸ் தரப்பு பயன்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது

தமிழக எதிர்க்கட்சியான அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், கடிதத் தலைப்பு போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பு பயன்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கடந்த 2022 ஜூலை 11 ஆம் திகதி நடந்த அதிமுக பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை இடைக்காலப் பொதுச் செயலாளராக தேர்வு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்குத் தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்தது.



இந்த நிலையில், அதிமுகவின் பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பழனிசாமி தரப்பு மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண்,வழக்கு மூன்றாவது முறையாக விசாரணைக்கு வருகிறது. எதிர் மனுதாரர்கள் இதுவரை பதில் மனுவைத் தாக்கல் செய்யவில்லை. என்பதால் நீதிமன்றம் தங்கள் மனுவை ஏற்று தீர்ப்பை வழங்கவேண்டும் என்று தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு பதிவாகிவிட்டது. பதில்மனுவைத் தாக்கல் செய்ய குறுகிய அவகாசம் வேண்டும், என்று ஓபிஎஸ் தரப்பு வழக்கறிஞர் பி.ராஜலட்சுமி குறிப்பிட்டார்.

தொடர்ந்த இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, பொதுக்குழுத் தீர்மானங்கள் மற்றும் பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை எதுவும் விதிக்கவில்லை. எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம், கடிதத் தலைப்புப் போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓபிஎஸ் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்தக் கூடாது, என்று இடைக்காலத் தடை விதித்து, வழக்கை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (04)






# கல்முனை மஹ்மூத் கல்லூரியில் திண்மக் கழிவகற்றல் மேம்பாடு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்மியா சனூஸ் நேற்று கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து, மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியை சந்தித்து, கல்லூரியில் திண்மக்கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றல் சேவையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான பொறிமுறைகள் பற்றி ஆணையாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் பாடசாலைகளில் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்காக மாநகர சபையினால் வகுக்கப்பட்டுள்ள விசேட திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தமது கல்லூரி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என அதிபர் உறுதியளித்தார்.

அத்துடன் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்கான பைகளையும் மாநகர ஆணையாளரிடம் இருந்து அவர் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக், மேற்பார்வையாளர் யூ.கே.காலிதீன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ் இந்துக் கல்லூரி அணி பளுதூக்கலில் சம்பியனானது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பளுதூக்கும் சம்மேளத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட நொவிசஸ் பளுதூக்கும் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துள்ள இம்மாணவர்களுக்கும் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளருக்கும் அதிபர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஹட்டன் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ கடை வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே அந்த வீதியில் உள்ள சனசமூக நிலையத்துக்கு அருகில் நீர்த்தேக்கத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று இரவு காணாமல்போயிருந்த நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

56 வயது மதிக்கத்தக்க விக்கிரம ஆராச்சி லாகே ஜெய திஸ்ஸ என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இலங்கையில் சுமார் 11,000 நுண்நிதி நிறுவனங்கள் அவற்றில் 5 மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன!

## புதிய சட்டம் வரும் என்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்



இலங்கையில் சுமார் 11,000 நுண்நிதி நிறுவனங்கள் இயங்கி வருகின்ற போதிலும் 5 நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் கிராமப்புற குறைந்த வருமானம் பெறும் மக்களைக் கையாளும் இந்த நிறுவனங்களின் செல்வாக்கு காரணமாக சுமார் 30 லட்சம் பேர் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த நிறுவனங்களை பதிவு செய்வது கட்டாயமானது என்றும், நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய அதிகாரசபை ஸ்தாபிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், "நுண்நிதி நிறுவனங்கள் இருப்பதில் தப்பில்லை, ஆனால் சிறந்த நிர்வாகம் இருத்தல் வேண்டும். நம் நாட்டில் 11,000 நுண்நிதி நிறுவனங்கள் உள்ளன, ஆனால் இவற்றுள் 5 மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு இல்லை என்பதன் அர்த்தம் அங்கு ஒழுங்குமுறை இல்லை என்பதாகும், அவர்கள் தத்தமக்கு விரும்பியபடி செயற்படுகின்றனர்.

இந்த நுண்நிதி முறையினால் கிராமப்புற பெண்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். நுண்நிதி முறையினால் சிரமத்திற்கு ஆளான 30 லட்சம் பேர் தற்போது ஒன்று சேர்ந்துள்ளனர், இது இப்போது சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது" என்றார்.

"எனவே, இதற்கென புதிய சட்டத்தை கொண்டு வரவுள்ளோம், இதன்படி அனைத்து நுண்நிதி நிறுவனங்களும் பதிவு செய்யப்படல் வேண்டும். அவை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். இந்த சட்ட திட்டங்களை பூர்த்தி செய்யாதவர்களுக்கு ரூபாய் 50 லட்சம் அபராதமும் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்" எனவும் அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார். (ரெந-13)

# களுத்துறையில் இ.போ.ச. விபத்து 13 பேர் வைத்தியசாலையில்



களுத்துறை - நாகொட பகுதியில் இன்று காலை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த 13 பேர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாபலகம பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஒரே திசையில் பயணித்த ஓட்டோ ஒன்று திடீரென வலது பக்கம் நோக்கித் திரும்பிய போது பஸ் சாரதி விபத்தைத் தவிர்க்க முற்பட்டுள்ளார். இதன்போது பஸ் வீதியை விட்டு விலகி சுவரில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. (அ)

# காதலியைக் கழுத்தறுத்து கொலை செய்த காதலன்!

## தென்னிலங்கையில் பயங்கரம்

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று காலை 22 வயதுடைய யுவதி ஒருவர் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் பிரதேசத்தை விட்டு ஓடிச் சென்று களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் தான் சுகயீனமடைந்திருப்பதாகக் கூறி அனுமதிக்கப்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் தெஹிவளை, எண்டர்ன் வீதி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய அச்சினி துஷாரி என்ற யுவதியே இன்று காலை ஹோமாகம நீதிமன்ற வீதியில் வைத்துக் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

யுவதியின் காதலனே இந்தக் கொலையைப் புரிந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இன்று காலை களுத்துறை நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவரது சட்டைப் பையில் இரத்தக் கறை காணப்பட்டுள்ளது.

களுத்துறை தெற்கு தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்கவின் மேற்பார்வையின் கீழ் மேலதிக விசாரணைகளின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொலிஸ் பாதுகாப்பில் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# இலங்கையில் தனிநபர் சீனி நுகர்வு 24.30 கிலோவாகக் குறைந்துள்ளது

## மத்திய வங்கி தெரிவிப்பு

இலங்கையில் கடந்த வருடம் (2022) தனிநபர் சீனி நுகர்வு 24.30 கிலோவாகக் குறைந்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் பதிவுகளின்படி, கடந்த பத்து வருடங்களில் மிகக் குறைந்த தனிநபர் சீனி நுகர்வு 2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள அதேவேளை, அதிக தனிநபர் சீனி நுகர்வு 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, அந்த வருடத்தில் தனிநபர் சீனி நுகர்வு 33.87 கிலோவாக அமைந்திருந்தது.

நாட்டின் மொத்தச் சீனித் தேவையில் 15 சதவீதம் உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்ற அதேவேளை மீதமுள்ள தேவை இறக்குமதியின் மூலமே பூர்த்தியாகிறது எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய கடந்த வருடம் (2022) இலங்கைக்கு நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மெட்ரிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கென 82,644 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது எனவும் மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரெந-11)

# ஒரு பிள்ளையின் தாய் கழுத்தறுத்து கொலை

கிரிந்திவெல ஊராபொல பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான கே.ஏ.சஞ்சீவனி எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் பல வருடங்களாக வெளிநாட்டில் தொழில் செய்து வருகின்றார் எனவும், அந்தப் பெண் கணவரின் தாய், தந்தை மற்றும் சகோதரருடன் கணவரின் வீட்டில் வசித்து வந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


உயிரிழந்த பெண் வீட்டின் வரவேற்பறையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்ட அந்தப் பெண்ணின் கணவரின் தாயார், சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் தாயாருக்கு அறிவித்தார். அதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பூகொட நீதிமன்ற பதில் நீதிவான் கமல் சம்பந்த பெரும சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தைப் பார்வையிட்டார்.

சடலத்தை வத்துபிட்டிவல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான், அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் மைத்துனர் (கணவரின் சகோதரன்) கொலைக்குப் பின்னர் தலைமறைவாகியுள்ளார் எனவும், கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் கிரிந்திவெல பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தம்பலகாமம் பிரதேசத்தில் குடிசன மதிப்பீட்டுப் பணி



(ஹஸ்பர்)

குடிசன மதிப்பீடு செய்யும் பணியானது தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய வகையில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தொடராக இடம்பெற்று வருகின்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க மீரா நகர் கிராம சேவகர் பிரிவிலும் இன்று குடிசன மதிப்பீட்டுப் பணி இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவிலும் இக்குடிசன மதிப்பீட்டு வேலைத் திட்டம் நடைபெறுகிறது.

இதில் குடிசன மதிப்பீட்டு குழுவின் மேற்பார்வையாளரும் சமூக சேவை உத்தியோகத்தருமான ப.சுதன் மற்றும் மீரா நகர் கிராம சேவகர் நௌசாட் உள்ளிட்டோரும் பங்கெடுத்தனர்.

# பதுளை மாவட்ட வீதிகளுக்கு புதிய பெயர் சூட்டத் தீர்மானம்

பதுளை மாவட்டத்தில் பெயரிடப்படாத அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்டுவதோடு வீடுகளுக்கான இலக்கங்களுடன் முகவரிகளை வழங்கும் ஏற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மேஜர் சுதர்சன தெனிபிட்டிய தெரிவித்தார்.

சரியான முகவரி இல்லாத காரணத்தால் நேர்முகத்தேர்வு, நியமனக் கடிதம் போன்ற ஆவணங்கள் கிடைக்காமல் சிரமத்திற்கு உள்ளான பலர் தம்மிடம் முறைப்பாடு செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஒரே பெயரில் பலர் உள்ளனர், வீட்டு இலக்கம் இல்லை, முகவரி உள்ளவர்கள் கூட முழு முகவரியை சரியாக பதிவு செய்யாததால், அவர்களுக்கு கடிதங்கள் மற்றும் பொதிகளை வழங்குவதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பதுளை பிராந்திய தபால் அத்தியட்சகர் ஏ.ஜி. சமன் மஹிந்த தெரிவித்துள்ளார். (க)

# சமஷ்டிக் கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் யாழில்






இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழரின் இணைப் பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் யாழ்ப்பாணத் தில் இன்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கி ணைப்பாளர் க.லவகுசராசா தலைமையில் வடக்கு கிழக்கிலிருந்து வருபை தந்த பெருமளவிலான மக்க ளின் பங்கேற்புடன் நல்லூர் கிட்டு பூங்காவில் இன்று காலை நடைபெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட் டில் கடந்த 2022 ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசி யல் தீர்வு வேண்டிய 100 நாள் செயல் முனைவின் இறுதி நாளான 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம் திகதி வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு' வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

இப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராண்டு பூர்த்தி நாளான இன்று வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றிணை யும் 'இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம்' எனும் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ் வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர் கள் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்இ பல்கலைக் கழக மாணவர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள்இ மனித உரிமை பாது காவலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (01)

## தர்மபுரம் வைத்தியசாலைக்கு அருகாமையில் அபாய நிலையிலிருந்த மரம் அகற்றப்பட்டது



கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம் வைத்தியசா லைக்கு அருகாமையில் ஏ.35 பிரதான வீதியின் அருகில் மரம் ஒன்றின் கிளை முறிந்த நிலையில் ஏனைய கிளைகள் வீதியில் போக்குவரத்துக்கு ஆபத் தாக இருப்பதாக தெரிவித்து செய்தியொன்று வெளியிடப் பட்டிருந்தது.

இந்தச் செய்தியை அடுத்து இன்றைய தினம் கிளி நொச்சி மாவட்ட மரக்கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கை யாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசாவின் நிதி உதவி யுடன் வீதி ஓரமாக நின்ற மரம் பாதுகாப்பாக முற்று முழுதாக அகற்றப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் மற்றும் பாதசாரி கள் சம்பந்தப்பட்ட மரத்தை அகற்ற உதவியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (02)




JRIDE
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2023இல் வெளியிடப்பெற்றது.